**இலங்கை பத்திரிகை பேரவை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பத்திரிகை பேரவையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் உள்ளடங்கலாக 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேரவையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிறகு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விசாலம் (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பேரவை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆவது பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படியொன்று மீள் மதிப்பீடு செய்யப்படும் போது அந்த சொத்துக்கு உரிய ஆதனம், | எதிர்காலத்தில் அந்த நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் உருப்படியொன்று மீள் மதிப்பீடு செய்யப்படும் போது அந்த சொத்துக்கு உரித்தாகக்கூடிய ஆதனம், பொறிகள் |

| | | |
|---|---|---|
| பொறிகள் மற்றும் உபகரணங்களின் வகுப்பு முழுவதும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மனைப் பொருட்கள் மற்றும் பொருத்துதல் வகுப்பிற்குள், அலுவலக மற்றும் நலன்புரி உபகரணங்கள் வகுப்பிற்குள் மற்றும் நூல் நிலைய புத்தக வகுப்பிற்குள் ரூபா 6,957,152 கிரயமுள்ள உருப்படிகள் மீள் மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | மற்றும் உபகரணங்கள் வகுப்பை முழுமையாக மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 90 ஆவது பந்தியின் பிரகாரம் ரூபா 3,727,380 கிரயத்துடனான ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது நிறுவனத்தினால் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் போதுமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அந்த நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீட்டின் போது நிறுவனத்தினால் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் போதுமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது நிறுவனத்தினால் பதவியணி உறுப்பினர்கள் 5 பேரை உள்ளடக்கிய குழுவொன்று இதற்காக பயன்படுத்தப் பட்டிருந்ததுடன் மதிப்பிடுதல் தொடர்பாக இந்தக் குழு உறுப்பினர்களின் அறிவு மட்டம் மற்றும் தகைமை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாததுடன், மீள் | இலங்கை பத்திரிகை பேரவையில் மிகவும் வரையறுக்கப்பட்ட பதவியணியினர்களே காணப்படுவதுடன், அதில் மூன்றில் ஒரு பங்கு ஊழியர்கள் ஆரம்ப வகுப்பைச் சேர்ந்தவர்களாவர். அதனால் காணப்படுகின்ற ஊழியர்கள் எண்ணிக்கையில் மிகவும் தகுதியானவர்களை | ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்தல் தகுதிவாய்ந்த குழுவொன்றினால் மேற்கொள்ளப்படவேண்டும். |

| | |
|---|---|
| மதிப்பீட்டினால் உருவாக்கப்பட்ட மீள்மதிப்பீட்டுப் பெறுமதி தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினையாக காணப்பட்டது. | தெரிவு செய்து சொத்து மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவை 5.4.10 | பேரவையினால் தற்போதைய தொடர்பாடல் போக்கு மற்றும் பொதுமக்கள் உரிமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பெறுபவர் கணக்கெடுப்பு மேற்கொள்வதற்காக தனியார் நிறுவனத்துடன் ரூபா 1,830,000 வுக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டிருந்த போதிலும் ஒப்பந்த தொகையில் நூற்றுக்கு 10 க்கு குறைவில்லாத செயலாற்றல் பிணையொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை . | நிர்மாண ஒப்பந்தம், பொருள் ஒப்பந்தம் போன்ற சந்தர்ப்பங்களில் விலை மனுப்பிணை, மற்றும் செயலாற்றல் பிணை ஆகியன பெறப்பட்ட போதிலும் பேரவை பெற்றுக்கொண்ட சேவையின் தன்மையை பொருட்டு சேவை வழங்குனர்களிடமிருந் து இவ்வாறான பிணையொன்றை பெற்றுக் கொள்ளல் கடினமான விடயம் என்பதுடன் அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பேரவை தீர்மானங்களை மேற்கொண்டிருந்தது. அதன் பிரகாரம் பேரவைக்கு பாதகம் ஏற்படாத வகையில் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டதுடன், இங்கு பூரணமான பெறுதியில் நூற்றுக்கு 40 ஐ இறுதி அறிக்கை பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் | நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் சேவைகள் பெறப்பட்டதுடன் இறுதி அறிக்கை வரையும் நேர்த்தியான சேவையொன்றை பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக உள்ளது. | |
| (ஆ) | பத்திரிகைப் பேரவை அதிகாரச் சட்டத்தின் 18 ஆவது பிரிவு | இந்தப் பிரிவின் தண்டப்பணம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குள் பத்திரிகைகள் பதிவு செய்வதற்கான தாமதக் கட்டணமாக அறவிடப்பட்ட ரூபா 59,100 தொகையை ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | பேரவையின் ஆரம்பத்தில் இருந்தே பேரவையின் வருமானம் நிதிய கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதுடன் பொது திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெறும் பணம் மற்றும் ஏனைய வருமானங்கள் அனைத்தும் இந்தக்கணக்கிற்கே செலவு வைக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் தண்டப்பணமாக அறவிடப்படும் வருமானங்கள் ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு உத்தியோகத்தர் களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. | தண்டப்பணம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

**1.7 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பேரவையினால் முறையே 1993 நவம்பர் 05 ஆந் திகதி மற்றும் | பேரவையினால் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற | நிதியக் கணக்குகள் |

| | | |
|---|---|---|
| 2009 செப்தெம்பர் 07 ஆந் திகதிகளில் ஆய்வு நிதியம் மற்றும் கடன் நிதியம் என பெயரிடப்பட்டு திறக்கப்பட்ட இரண்டு வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை கணக்குகளில் மீதி முறையே ரூபா 3,838,805 மற்றும் ரூபா 1,511,031 ஆக இருந்தது. எப்ஜஎன்/பீஈஎன்168 மற்றும் 2017 திசெம்பர் 19 ஆந் திகதிய பேரவையின் தலைவரின் கடிதத்தின் மூலம் இந்நிதியக் கணக்குகளை பராமரிப்பதற்கு பொது பாதீட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினது அனுமிக்காக கோரப்பட்டிருந்த போதிலும் 2021 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் அந்த அனுமதி கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | விண்ணப்பங்களின் பிரகாரம் கடன் நிதியத்திற்காக 2020.01.21 ஆந் திகதி வரிசை அமைச்சின் ஊடாக முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் கணக்காய்வு முகாமைத்துவ குழுவிலும் இது தொடர்பாக கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் மேலும் அந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்து வதற்கு உரிய அனுமதியை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | பராமரிக்கப் படுவதற்காக முறையான அனுமதியொன் றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்ப ட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,973,060 தொகையான மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,487,617 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,485,443 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு டிப்ளோமா மற்றும் சான்றுப்பத்திர கற்கை நெறியின் செலவுகள் குறைவடைதல் மற்றும் வெளிநாட்டுப் பயணச் செலவுகள் குறைவடைதல் ஆகியன பிரதான காரணங்களாக காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவினை ஆய்வு செய்யும் போது 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்தது. ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான தேய்மான சீராக்கத்தின் பின்னர் 2019 ஆம் ஆண்டிலே ரூபா 18,210,648 ஆன பங்களிப்பு மீளாய்வாண்டிலே ரூபா 21,977,311 வரை நூற்றுக்கு 21 ஆல் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பத்திரிகை பேரவை மற்றும் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு தொடர்பான ஒப்பீட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு | இது தொடர்பாக கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் | உரிய அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஆராய்ச்சி அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 200,000 தொகை முற்பணமாக களணி பல்கலைக்கழகத்தின் வெகுஜன ஊடகத்துறைப் பிரிவிற்குச் 2015 நவம்பர் 24 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன் அக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் பேரவைக்கு பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இதுவரைக்கும் ஆராய்ச்சியில் முடிவுறுத்தப்பட்டுள்ள அறிக்கையை பெற்றுக் கொண்டு மேலும் பணம் செலுத்தப்படாமைக்கான இணக்கப்பாட்டை பெற்றுக் கொண்டு உரிய ஆராய்ச்சியை முடிவுறுத்திக் கொள்ளுமாறு முன் மொழியப்பட்டிருந்தது. | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2010 மே 14 ஆந் திகதிய ஜனாதிபதி செயலக கடித இலக்கம் சீஏ/1/17/1 இன் 1 ஆம் பந்தி மற்றும் 2012 யூலை 10 இன் பொது முயற்சிகள் குழுவின் 7 ஆவது கட்டளை என்பவற்றின் பிரகாரம் பேரவை அரச கட்டிடமொன்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பேரவையின் ஆரம்பம் முதல் 21 வருடங்களாக வாடகைக்கு பெற்றுக் கொண்ட தனியார் கட்டிடங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் அதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மாத்திரம் கட்டிட வாடகையாக ரூபா 26,108,800 செலவிடப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | அரச நிறுவனங்க ளுடன் மேலும் கலந்துரையா டல் களை மேற்கொண்டு பொருத்தமா ன கட்டிட வளவொன்றை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ப்பட வேண்டும். |
| (இ) | 1981 ஒக்டோபர் 14 ஆந் திகதிய 165/5 ஏ ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி குறிப்பின்படி, பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள பத்திரிகை கலைஞர்களுக்கான ஒழுக்க நெறிமுறை கோவைக்கு இணங்க தினசரி பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளை புலனாய்வு செய்து பார்ப்பதற்கான முறைமையொன்று காணப்பட்ட போதிலும், பிரசுரிக்கப்படும் | கொவிட் தொற்று நிலைமை காரணமாக வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையொன்றே நாட்டிற்குள் வெளியிடப்பட்டதுடன் அதுவும் அச்சுப் பதிவு பிரதிக்கு பதிலாக இலத்திரனியல் பிரதியாக வெளியிடப்பட்டது. எதிர்பார்த்திராத இந்த நிலைமை ஏனைய துறைகளுக்கும் அத்தோடு பேரவையும் முகங் | புலனாய்வு அறிக்கை சம்பந்தமாக மற்றும் ஒழுக்க நெறிகளை கடைப்பிடித்த ல் தொடர்பாக தேவையான மதிப்பீட்டை மேற்கொள்ளு தல் தொடர்பாக |

| | | |
|---|---|---|
| அளவிற்கு ஒப்பீடாக வரையறுக்கப்பட்ட புலனாய்வு அறிக்கை அளவொன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன், அப்புலனாய்வு அறிக்கைகள் தொடர்பாகவும் ஒழுக்க நெறிகளை பின்பற்றுதல் தொடர்பாக தேவையான மதிப்பீடுகள் மேற்கொள்வது தொடர்பாக பேரவையின் போதியளவு கவனத்தினை செலுத்தியிருக்கவில்லை. | கொடுப்பதற்கு நேர்ந்ததுடன் கிடைக்கப் பெற்ற வரையறுக்கப்பட்ட பிரதிகளின் மூலம் உச்ச புலனாய்வொன்றை மேற்கொள்வதற்கு பேரவை முயற்சிகளை செய்தது. அவ்வாறே அனேகமான பத்திரிகைகள் அச்சிடப்பட்டு அல்லது ஈ பிரதிகள் அல்லது வெளியீட்டை மேற்கொள்ளாமல் இருப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் போதியளவு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புத்திரிகை பேரவை அதிகாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படாத சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்ற பத்திரிகைகள் தொடர்பாக தேவையான சட்டங்கள் மற்றும் விதிகள் கட்டளை உருவாக்கத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வில்லை. | மேதகு ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை வெளியீட்டின் பிரகாரம் பத்திரிகைகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த பத்திரிகை பேரவை அதிகாரச் சட்டம் இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகவியலிலும் உள்வாங்கப்படக் கூடிய வகையில் கட்டமைக்கப்படும் நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனால் தற்போது அனைத்து ஊடகங்களினதும் பதிவு, மேற்பார்வை மற்றும் ஏதேனும் அவதூறான விடயமொன்று அவற்றிலிருந்து வெளிப்படுத்தும் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முறைகள் தொடர்பாக சட்ட வரைவொன்று ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. | பதிவு செய்யப்படாமல் விற்கப்படுகின்ற பத்திரிகைகள் தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்வதற்கு பேரவை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் 09 ஆவது பிரிவின் பிரகாரம் பத்திரிகைகளுக்கு மற்றும் பதிப்பாசிரியர்களுக்கு எதிராக பேரவையினால் செயற்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குள் செய்திப் பத்திரிகைகளுக்கு எதிராக பொது மக்களிடமிருந்தும் வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்தும் 71 முறைப்பாடுகளும் மற்றும் 2019 ஆம் ஆண்டிலே தீர்க்கப்படாது முன் கொண்டுவரப்பட்ட 62 முறைப்பாடுகளும் உள்ளடங்கலாக முழு முறைப்பாடுகளின் எண்ணிக்கை 133 ஆக காணப்பட்டதுடன் அதில் 69 முறைப்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்குள் இரண்டு சந்தர்ப்பங்களில் நாட்டிற்குள் கொவிட் தொற்று நிலைமை காணப்பட்டதன் காரணமாக பத்திரிகை முறைப்பாடுகளை விசாரணைக்குட் படுத்துவதை வரையறுக்கப்பட்டிருந்தது. அந்த நிலைமை சீரடைந்த பின்னர் முறைப்பாடுகளின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டது. | பத்திரிகை முறைப்பாடு களுக்கான தீர்வை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 08 வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு பேரவை தவறியிருந்தது. | இலங்கை பத்திரிகை பேரவையின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற அனேகமான வேலைத் திட்டங்கள் பல்வேறு குழுக்கள் மற்றும் தனி நபர்களை தொடர்புபடுத்தி தலைநகரம் மற்றும் அதற்கு அப்பால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்களாகும். விசேடமாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை சம்பந்தப்படுத்தி வேலைத்திட்டங்கள் | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க வேலைத் திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடாத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், சென்ற வருடம் இரண்டு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட கொவிட் தொற்று நிலைமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் மக்கள்ஒன்று கூடுதலிற்கான வரையறையின் காரணமாக வருடம் பூராகவும் அவ்வாறான வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குள் செய்யப்பட வேண்டிய பத்திரிகைகளின் எண்ணிக்கை 250 ஆகவும் மற்றும் மதிப்பிடப்பட்ட பத்திரிகைகளின் பதிவு வருமானம் ரூபா 500,000 ஆகவும் இருந்த போதிலும் உண்மையாக பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகளின் எண்ணிக்கை 172 ஆக உள்ளதோடு 78 பத்திரிகைகளுக்கான பதிவு வருமானம் அடையாளங் காணப்பட வேண்டிய போதிலும் 15 பத்திரிகைகளுக்கான ரூபா 86,000 மாத்திரம் வருமானமாக அடையாளங் காணப்பட்டிருப்பதுடன் எஞ்சிய 63 பத்திரிகைகளுக்கான வருமானம் அடையாளங் காணப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகளின் அளவை கவனத்திற் கொண்டு எதிர்வரும் வருடத்திற்காக குறிப்பிட்ட அளவு ஒன்று பதிவாகும் என்று அனுமானித்து அந்த எண்ணிக்கையை செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்படும் இது அனுமானிக்கப்பட்ட தொகையாகும். உரிய வருடத்திலே கொரோனா தொற்று காணப்பட்டதன் நிலைமை காரணமாக பிரசித்தமான தேசிய பத்திரிகைகளின் அச்சுப் பிரதிக்கு பதிலாக இலத்திரனியல் பிரதியே பாவனைக்குட்படுத்தப் பட்டது. பத்திரிகைத் துறைக்கு இந்த நிலைமை மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியதுடன் எதிர்பார்க்கப்பட்ட (மாதாந்த, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வருடாந்த) பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகை பத்திரிகை பேரவையில் பதிவு செய்யப்படவில்லை.) | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பத்திரிகைகள் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ஒரு வேலைத்திட்டத்திற்கு ரூபா 50,000 வீதம் பத்திரிகை யாளர்களுக்கான 10 | மேற்குறிப்பிட்டவாறு ரூபா 500,000 செலவிட்டு ஒன்று ரூபா 5,000 பெறுமதியான 100 பாடசாலை | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க வேலைத் |

| | | |
|---|---|---|
| நலன்புரி வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு பேரவை திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குள் ஒரு வேலைத்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 802,897 செலவிடப்பட்டிருந்ததுடன் பேரவையின் முன்னேற்ற அறிக்கையில் நிதி செயலாற்றலாக நூற்றுக்கு 140 காட்டப்பட்டிருந்த போதிலும் அது பாதிடப்பட்ட அளவை விஞ்சியிருந்தது. | உபகரணத் தொகுதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அத்தினத்தில் இடம்பெற்ற வேலைத்திட்டத்திற்காக எஞ்சிய தொகை செலவானது நாட்டில் நிலவுகின்ற கொவிட் தொற்று நிலைமை காரணமாக நாடு பூராகவும் பேரவையினால் நடாத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களை இந்த வருடம் நடாத்துவதற்கு முடியாது போனாலும் பேரவையின் நோக்கம் மற்றும் பணிகள் தொடர்பாகவும், பத்திரிகையாளர்களின் நலன்புரிகள் தொடர்பாக உள்ள முக்கியத்துவத்தை விளக்குவதற்காக, விசேடமாக பத்திரிகையாளர்களின் நலன்புரிகள் ஊடாக சிறந்த பணியொன்றை அவர்களிடமிருந்து இந்த நாட்டிற்கு பெற்றுக் கொடுப்பதை எதிர்பார்த்தும் இந்த வெலைத்திட்டம் நடாத்தப்பட்டது. | திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 பிரகாரம் பேரவையினுள் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று நடைமுறைப்படுத்தப்படாத துடன் பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளக கணக்காய்வு பதவியொன்று உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த உள்ளகக் கணக்காய்வு பதவி தொடர்பாக 2019.07.18, 2019.07.25, 2019.08.07, 2019.08.19, 2019.09.12, 2020.08.25 ஆகிய தினங்களில் முகாமைத்துவ உதவி திணைக்களம் வரைவு அமைச்சு மற்றும் பேரவை ஆகியவற்றுக் கிடையில் பரிமாற்றப்பட்ட கடிதத்தின் ஊடாக உரிய பதவியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அது தொடர்பான தேவையான மேலதிக நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காவொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக் கிடையிலான நூற்றுக்கு 5 இல் இருந்து நூற்றுக்கு 67 வரையானதும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே நூற்றுக்கு 5 இல் இருந்து நூற்றுக்கு 100 வரையானதுமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீட்டுப் பதிவேட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டிற்குள் நிலவிய கொவிட் தொற்று நிலைமைக் காரணமாக நிறுவன நடவடிக்கைகளை அத்தியவசியமான நடவடிக்கையாக வரையறுத்ததன் காரணமாக பெரும்பாலும் திட்டமிடப்பட்டிருந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முடியாது போனதன் காரணமாக இவ்வாறான முரணகள் ஏற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான முரண்களை குறைத்துக் கொள்வதற்கு பாதீட்டுப் பதிவேட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பாதீட்டுப் பதிவேட்டை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |